MNPEA/YAD/04 /යො.පු.-2018 2018.01.12

தமிழ் மொழி பெயர்ப்பு

சுற்றுநிருப இலக்கம்: MNPEA01/2018

சகல அமைச்சின் செயலாளர்கள்
சகல மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள்

**"யொன்புரய" தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2018 நிகவெரட்டியா**

கௌரவ பிரதம மந்திரியின் வழிகாட்டல்களின் கீழ், தேசிய அபிவிருத்திக்காக இளம் சந்ததியினரின் சரியாக பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு, அவர்களது தலைமைத்துவ பண்புகள், திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றை சவதேச தரத்தில் அபிவிருத்தி செய்வதற்கான தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இந்த ஆண்டு நடத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்பிரகாரம், இந் நிகழ்ச்சித்திட்டம் 7000 இலங்கை இளைஞர்கள் மற்றும் யுவதிகள், வெளிநாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 100 இளைஞர்கள் மற்றும் யுவதிகள் ஆகியோரின் பங்களிப்புடன் 2018.03.28 ஆம் திகதியிலிருந்து 2018.04.01 ஆம் திகதி வரை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் ஆகியன ஒன்றிணைந்து நிகவெரட்டியாவிலுள்ள, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குரித்தான நிலப்பரப்பில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

02. இது தொடர்பான விஷேட கலந்துரையாடல் 2018.01.08 ஆம் திகதி பிரதம மந்திரியின் அலுவலகப் உத்தியோகத்தர்களின் பிரதானியும், மற்றும் சட்டமும் ஒழுங்குகள் மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல ரத்னாயக்க அவர்களின் தலைமைத்துவத்துடனும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ நிரோஷன் பெரேரா அவர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளடங்கலாக அரச நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

03. இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய "யொன்புரய" தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக முழு ஆரம்ப நிகழ்வுகள் தொடர்பாகவும், மற்றும் வேலைத்திட்டங்கள் நடைபெறும் திகதிகளில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள்/ மாகாண சபைகள், திணைக்களங்கள் அத்துடன் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் கீழ் வரும் நிறுவனங்கள் ஆகியன பூரண ஒத்துழைப்புக்களை வழங்கவும், ஒவ்வோர் அமைச்சுக்கும்/ மாகாண சபைகளும் மற்றும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் 2018 வருடத்தில் அப்பிரிவுகளின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை விடுவிப்புச் செய்வதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கும்.

04. அதன் பிரகாரம், இந்த வேலைத்திட்டத்தினை சிறந்த முறையில் வெற்றி பெறச் செய்வதற்கு தங்களது அமைச்சு/ மாகாண சபை, இவற்றின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் அலுவலர்கள் குறித்து ஒதுக்கப்பட்ட திகதிகளில் தவறாது தமது குறித்த கடமைகளை ஆற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவாக்க கேட்டுக்கொள்கின்றேன்.

ஒப்பம்:
**கே.டி.எச். ருவன்சந்திர**
செயலாளர்

பிரதிகள்:
1. ஜனாதிபதியின் செயலாளர் - தகவலுக்காக
2. பிரதம மந்திரியின் செயலாளர் - தகவலுக்காக
3. அமைச்சரவையின் செயலாளர் - தகவலுக்காக
4. கணக்காய்வாளர் நாயகம் - தகவலுக்காக